விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 198 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 21 சனிக்கிழமை (05.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

**ஜூலை 5**
**இன்று கரும்புலிகள் தினம்**



முள்ளிவாய்க்கால் குருந்தடிப் பிள்ளையார் ஆலயத்தில்

## தேரின் கலசம் கழன்று வீழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழப்பு





(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் குருந்தடிப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழாவில் தேரிலுள்ள கலசம் விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று இடம்பெற்றுள்ளது.

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த 55 வயதுடைய 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பருத்தித்துறையிலிருந்து கொழும்பு சென்ற பஸ் விபத்து




07ஆம் பக்கம் பார்க்க

அச்சுவேலியில் வாந்தி எடுத்த

## ஒன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் வாந்தி எடுத்து மயக்கமடைந்த ஒன்றரை வயது ஆண் குழந்தை ஒன்று நேற்று உயிரிழந்துள்ளது.

இதில் அச்சுவேலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த அந்தோனிராஜன் கனிஸ்டன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

# செம்மணிப் புதைகுழியில் சிறுமியின் ஆடை மீட்பு

(யாழ்ப்பாணம்)

- மேலும் இரு எலும்புக் கூடுகள் நேற்றும் அடையாளம்.
- இதுவரை 42 மனித எச்சங்கள் அடையாளம்.
- தொடர்ந்து இன்றும் அகழ்வுப் பணி.



(15ஆம் பக்கம் பார்க்க)

## ஹயஸ் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

வவுனியாவில் சம்பவம்



(வவுனியா)

வவுனியாவில் ஹயஸ் வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா யாழ்.வீதி புதிய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் 24 வயது இளைஞனுக்கு மலேரியாக் காய்ச்சல் இனங்காணப்பட்டது

யாழ்.போதனா பிரதிப் பணிப்பாளர் யமுனாநந்தா




(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் 24 வயதுடைய இளைஞன் ஒருவருக்கு மலேரியாக் காய்ச்சல் இனங்காணப்பட்டுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த மாதம் 30ஆம் திகதி காய்ச்சலுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு 15ஆம் பக்கம் பார்க்க

சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லவில்லை

## வவுனியாவில் கல்விப் பணிமனை முன் மாணவன் கவனயீர்ப்பு



(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலய மாணவன் ஒருவன் தன்னை பாடசாலையின் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லவில்லை எனத் தெரிவித்து வவுனியா தெற்கு 15ஆம் பக்கம் பார்க்க

மானிப்பாய் நகர்ப் பகுதியில்

## மோட்டார் சைக்கிள் மீது இனந்தெரியாத குழு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் நகர்ப் பகுதியில் கடை ஒன்றுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

நேற்று மாலை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐவர் கொண்ட குழு மேற்படி 15ஆம் பக்கம் பார்க்க

## நவாலியில் ஐம்பொன் விக்கிரகம் திருட்டு

(மானிப்பாய்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு 15ஆம் பக்கம் பார்க்க

## பொதுத் துறையை மேம்படுத்த நடவடிக்கை - ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் பொதுத் துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று அறிவித்துள்ளார்.

அரசு துறையின் பௌதிக வளங்களை மேம்படுத்தும் நோக்கில் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்ட அறிவித்தலும் வருடாந்த ஒன்றுகூடலுக்கான அழைப்பும்
## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம்
## வடமாகாணம்

மேற்படி எமது தொழிற்சங்கத்தின் நிர்வாகசபை தெரிவிற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 26.07.2025 (சனிக்கிழமை) பி.ப 3.30 மணிக்கும் அதனைத் தொடர்ந்து பி.ப 5.30 மணிக்கு வருட இறுதி ஒன்றுகூடல் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வும் யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள திவ்ய மஹால் (நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில்) மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே இப்பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்

(1293)

## பொதுத்துறை...

"பிரஜா சக்தி தேசிய திட்டம்" நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மனிதவள மேம்பாட்டிற்காக அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தியதாகக் குறிப்பிட்டார்.

அதேபோல், மாவட்ட செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்களுக்குத் தேவையான வாகனங்களை வாங்குவதற்கும் நிதி ஒதுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம)

## 10 ஆம் ஆண்டு நினைவுநாள்



அமரர்

### செல்வன் பத்மநாதன் பாவலன்

திதி : 05.07.2025

ஆசை மகனே அம்மோய்
என்று ஒரு சொல்லில் உறைய
வைப்பாயே; பத்து ஆண்டு ஆனதையா
நீயில்லா உலகமிது
நித்தமுமே சோகமையா
உன் நினைவு
எங்கள் மூச்சு
ஆத்ம சாந்திபெற
வேண்டி நிற்கின்றோம்.

மலர்வு 21.01.1991
உதிர்வு 05.07.2015

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(1290)

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்க்காணும் ஆட்கள் தேவை.

1. Manager (2 Years experience)
2. Administration
3. Computer Billing + Cashier
4. Sales Assistant
5. Driver - AD Licence
6. Packing - பொதியிடல்
7. part time - 5.00 pm to 10.00pm

- வயது எல்லை 18 – 35
- யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு :
077 419 5209
077 419 5218

(4721)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## பெண் விற்பனையாளர் தேவை

எமது பிடவை விற்பனை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள அல்லது தொழில் பழக ஆர்வம் உள்ள பெண் பணியாளர் தேவை. மதிய உணவுடன் கூடிய சம்பளம்.

சிவகணேசன் TEX
41,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(4723)

## நயினை அம்மன் Real Estate

யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய பகுதிகளில் காணி, வீடு விற்க உள்ளவர்கள் மற்றும் வீடு வாடகைக்கு வழங்க உள்ள உரிமையாளர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

076 311 9485
076 050 3863

(1294)

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28.04.2001



மறைவு 05.07.2022

### அமரர் பவானந்தன் கஜேந்திரன்

(ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவன்)

திதி: சப்தமி வளர்பிறை

ஆண்டுகள் மூன்று ஆனது மகனே
எம்மை விட்டு நீ பிரிந்து
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு
உறவுகளை தவிக்கவிட்டு
இமைகளை மூடி விட்டாய்
எம்மையெல்லாம் அழவிட்டு
இறைவனை நாடி விட்டாய்
உன்னை எண்ணித் தினம் தினம்
மனம் வெம்புகின்றோம்
நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லை மகனே
நினைவிழந்து செயலிழந்து
நிற்கதியாய் நிற்கின்றோம் மகனே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.


ஆத்தியடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்

(C-3334)

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 14.06.1950



உதிர்வு 06.06.2025

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து கடந்த 06.06.2025 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த தும்பளை தெற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் நாராயணன் விஸ்வலிங்கம்

(ஓய்வு பெற்ற காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியரும்
யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் வருகைதரு விரிவுரையாளரும்)

நாளை (06.07.2025) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் நினைவு அஞ்சலி உரைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி வீதி,நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
077 669 0515. 077 206 7729

(4691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்!

## இது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும்

### செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்



(லண்டன்)

**செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து எடுக்கப்படும் சான்றுகள் அழிக்கப்படும் அபாயம் உள்ளது. அதனைப் பாதுகாக்க சர்வதேசத்திற்கு அதிகாரம் உள்ளது என பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் டேம் சியோனபன் மெக்டோனா தெரிவித்துள்ளார்.**

செம்மணியில் ஒரு மனிதப் புதைகுழி தோண்டப்படுதல் தமிழ் மக்கள் பல தசாப்தங்களாக அனுபவித்த வலி மற்றும் மௌனத்தைப் பேசுகிறது.

மேலும் சர்வதேச சமூகம் இறுதியாக உண்மை பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை வழங்க செயற்பட வேண்டும் என்றும் கோருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐ.நா. தீர்மானம் 46/1 இன் படி, இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்க, ஒருங்கிணைக்க, பகுப்பாய்வு செய்ய மற்றும் பாதுகாக்க சர்வதேச சமூகத்திற்கு அதிகாரம் உள்ளது. ஐ.நா. தான்கொண்டுள்ள ஆணையைப் பின்பற்ற வேண்டிய நேரம் இது.

1998 ஆம் ஆண்டு சோமரத்ன ராஜபக்சவின் சாட்சியத்தை பல செய்தி நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைகள் அரசுசாரா நிறுவனங்கள் செய்தி வெளியிட்டதிலிருந்து, செம்மணியில் ஒரு பெரிய புதைகுழி இருப்பதை உலகம் அறிந்திருக்கிறது. இருப்பினும், இப்போதுதான் அது தோண்டப்படுகிறது. இப்போதும் கூட, சான்றுகள் அழிக்கப்படும் அபாயம் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம், 46/1 தீர்மானத்தின் கட்டளைக்குள் சேகரிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களும் முறையாக சேகரிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்சில் தீர்மானம் 46/1 இன் இணை அனுசரணையாளராகவும், இலங்கையில் நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கு வரலாற்றுப் பொறுப்பைக் கொண்ட நாடாகவும், ஐக்கிய இராச்சியம் இந்த பிரச்சினையில் முன்னிலை வகிக்க வேண்டும்.

செம்மணிப் படுகொலையின் குற்றவாளிகள் மற்றும் அதைப் போன்றவர்கள் அடையாளம் காணப்பட்டு, விசாரிக்கப்பட்டு, நீதியின் முன் நிறுத்தப்படுவதை உறுதிசெய்ய இப்போது ஒரு சர்வதேச விசாரணை தொடங்கப்பட வேண்டும்.

இலங்கையில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் உள்ளபடி, இது சர்வதேச சமூகத்தின் பொறுப்பாகும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)




4 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர். திருமதி. யசோதா திரவியம்

மலர்வு: 31.05.1966 உதிர்வு: 20.06.2021

அன்பதனை சொரிந்து அருகிருந்து ஆதரித்த
எங்கள் தெய்வமே அம்மா
உங்கள் புன்னகை பூத்த பொன்முகம்
மறைந்து நான்கு ஆண்டுகள் ஆனதுவோ
உங்களை இறைவன் பாதமதில்
அமர்த்தி வணங்குகிறோம் தாயே

(4708)


இல: 22, பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்-2025

## மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும்



**கிரகநிலை** - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் சூரியன், குரு - அஷ்டம ஸ்தானத்தில் புதன் - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய், கேது - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.

**கிரக மாற்றம்:** 02.07.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி வக்கிரம் பெற ஆரம்பிக்கிறார். 03.07.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் புதன் வக்கிரம் பெற ஆரம்பிக்கிறார். 17.07.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சூரியன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.07.2025 அன்று புதன் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.07.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.07.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் ராசிநாதன் குரு சப்தம ஸ்தானத்தில் மிக அனுகூலமாக இருக்கிறார். பணப் புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்ப பிரச்சினை கட்டுக்குள் இருக்கும். ஆனாலும் தேவையான இடங்களில் நீங்கள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கலாம். நண்பர்கள் இடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் நல்ல வளர்ச்சியைக் காணலாம். உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்தவர்கள் தவறை உணர்ந்து உங்களிடம் வந்து சரணடைவார்கள்.

நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். தொழில் புரிவோருக்கு இருந்து வந்த மந்த நிலை மறையும். அலைச்சலும் வேலைப் பளுவும் ஓரளவு இருக்கத்தான் செய்யும். அதே வேளையில் நீங்கள் சென்ற இடமெல்லாம் அனுகூலம் ஏற்படும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.




ஏற்கனவே இருந்து வந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். அரசியல்வாதிகள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புகள் உண்டு. உங்கள் சொல்லுக்கு பிறர் கட்டுப்படும் நிலையும் உருவாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பான முன்னேற்றத்தை அடையலாம்.

**மூலம்:** இந்த மாதம் முன்பின் யோசிக்காமல் எதையாவது பேசி விடுவீர்கள். இதனால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. வழக்கத்தை விட செலவு கூடும். தொழில், வியாபாரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது மிகவும் நிதானமாக பேசுவது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் வர தாமதப்படும். புதிய ஓடர்கள் கிடைக்க அலைய வேண்டி இருக்கும்.

**பூராடம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு வகையில் அலைச்சல், கூடுதல் செலவை சந்திப்பார்கள். வேறு ஒருவர் செய்த செயலுக்கு வீண் பழி ஏற்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே வீண் மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வதன் மூலம் நன்மை உண்டாகும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் உங்களது பொருட்களை பத்திரமாக வைத்துக் கொள்வது நல்லது. முன் பின் யோசிக்காமல் பேசுவதை தவிர்ப்பது நல்லது. செலவு கூடும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வீண் அலைச்சல் உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது.

**பரிகாரம்:** வியாழக்கிழமை அன்று அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று 3 முறை வலம் வரவும்.

**சந்திராஷ்டம தினங்கள்: 25, 26**

**அதிஷ்ட தினங்கள்: 14, 15**

## குடும்பத்தில் சந்தோசம் நிலவும்!



**கிரகநிலை** - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், குரு - களத்திர ஸ்தானத்தில் புதன் - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய், கேது - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி, ராகு என கிரகங்கள் வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றம்:** 02.07.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி வக்கிரம் ஆரம்பிக்கிறார். 03.07.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 17.07.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து சூரியன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.07.2025 அன்று புதன் பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.07.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.07.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் இராசிநாதன் சனி அனுகூலமாக இருக்கிறார். யோகாதிபதி சுக்கிரனும் மிக பலமாக இருக்கிறார். சிக்கனம் தேவை. குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். மனைவி வழியில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வரலாம். ஆனாலும் அது நொடிப் பொழுதில் சரியாகி விடும். உத்தியோகஸ்தர்களுக்கு அதிக வேலைப் பளுவை சுமந்தாலும் அனைத்தையும் சுலபமாக செய்வீர்கள். அலைச்சல்கள் வரலாம்.

சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு உங்களுடைய வியாபாரம் சீராக நடக்கும். அதிக உழைப்பை செய்தவர்களுக்கு ஏற்ற பொருளாதார வளம் வந்து சேரும். மூதலீடுகளை திருப்பி எடுப்பதோடு மட்டுமல்லாமல் இலாபத்தையும் அள்ளுவீர்கள். வாடிக்கையாளர்கள் அதிகமாக வருவார்கள். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்குள் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். வரவு செலவு கணக்கில் இருந்து வந்த சந்தேகங்கள் நீங்கும்.

கலைத்துறையினருக்கு மிகப் பொன்னான காலமிது. சிறிது முயற்சி எடுத்தாலும் வாய்ப்புகள் வந்து குவியும். புதிய ஒப்பந்தங்களை துணிந்து ஏற்றுக் கொள்ளலாம். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்கள் உதவிகள் செய்து அனுசரனையாக இருப்பார்கள்.

உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நீங்கள் திறமையாகச் செய்வீர்கள். சுகாதிபதி செவ்வாயின் சஞ்சாரம் இராசிக்கு மறைந்திருந்தாலும்




அவரின் பார்வை அனுகூலத்தைக் கொடுக்கும். மாணவமணிகள் சிறிது சிரத்தை எடுத்தாலே பெரு வெற்றி பெறலாம். அனைத்திலும் நினைத்த மதிப்பெண்கள் கிடைக்கும்.

**உத்திராடம் 2, 3, 4 ஆம்பாதங்கள்:** இந்த மாதம் எடுத்த முயற்சிகள் கைகூடும். வரவுக்கேற்ற செலவு ஏற்படும். எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் உண்டாகும். மனோதைரியம் கூடும். மற்றவர்களால் தேவையற்ற குற்றசாட்டிற்கு ஆளாக நேரிடலாம். கண் நோய், பித்தம், வாதம் சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட்டு நீங்கும். திடீர் கோபம் உண்டாகும்.

**திருவோணம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் செலவுகள் அதிகரிக்கும். உங்கள் கீழ் வேலை செய்பவர்களின் செயல்களால் உங்களுக்கு கோபம் உண்டாகலாம். நிதானமாக அவர்களிடம் பேசுவது நன்மை தரும். பழைய பாக்கிகளை வசூலிப்பதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகம் தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். அலுவலகத்தில் உள்ள சக ஊழியர்கள், மேல் அதிகாரிகளிடம் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.

**அவிட்டம் 1, 2 ஆம்பாதங்கள்:** இந்த மாதம் கணவன், மனைவிக்கிடையே திடீர் வாக்குவாதம் ஏற்படும். கவனமாக பேசுவதன் மூலம் நெருக்கம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை குடும்பத்தினரின் ஆரோக்கிய குறைவு ஆகியவற்றால் செலவு அதிகரிக்கும். சில்லறை சண்டைகள் அக்கம் பக்கத்தினருடன் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. வலியச் சென்று உதவுவதன் மூலம் வீண் பழி ஏற்படலாம்.

**பரிகாரம்:** சனிக்கிழமை அன்று அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று நெய் விளக்கு ஏற்றி வழிபடவும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 01, 27, 28.

**அதிஷ்ட தினங்கள்:** 16, 17

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடை வளர்ப்பு -பகுதி 4

# பால் கறக்கும் சூழலும் பால் சுகாதாரமும்



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

சுத்தமான பாலுற்பத்திக்கு பால் கறக்கும் இடத்தினதும் மாடு வாழ்கின்ற இடத்தினதும் சுத்தம் மிக அவசியமானதாகும்.

1. சுற்றுச்சூழல் - மாடுகள் வளர்க்கப்படும் இடம் அழுக்கானதாகவும் நோய்கள் பரவக் கூடிய விதத்திலும் காணப்படுதல் பால் சுகாதாரத்தை பாதிக்கும். முடிந்த வரை தினமும் அந்த இடத்தை சுத்தம் செய்து வைக்க வேண்டும். அத்துடன் பால் கறக்கும் இடமும் பால் கறக்கும் இயந்திரங்களும் சுத்தமாகவும் தொற்று நீக்கம் செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும். பால் கறவை இயந்திரம் மூலமும் மடிய ழற்சி போன்ற நோய்கள் பரவக்கூடும்.

2. எரு முகாமைத்துவம் - இலங்கையின் பெரும்பாலான கொட்டகைகளில் கால்நடைகளின் எரு தேங்கியிருப்பதைக் காணமுடியும். எருக்களின் தொடுகை காரணமாக நோயுற்ற மாடுகளில் இருந்து சுகதேகி மாடுகள் தொற்றுக்கு உள்ளாக நேரிடும். மாடுகள் எரு காணப்படும் நிலத்தில் படுக்கும் போது குறிப்பாக முலைக் காம்பு தொடுகையுறும் போது மடியழற்சிக்கு உள்ளாக நேரிடும். எனவே முடிந்த வரை எரு முகாமைத்துவத்தை சரியாகச் செய்ய வேண்டும்.

3. பீடைகள் மற்றும் சிறிய விலங்குகள் - கொட்டகைகளுக்கு வரும் ஈக்கள், நுளம்புகள், உண்ணிகள், தெள்ளு, பூச்சிகள், எலிகள் போன்றவை பல நோய்களை பரப்பக் கூடியன. எனவே அவை வரக்கூடிய வழிகளை தவிர்க்க வேண்டும். பண்ணையை அண்மித்து அவை பெருகும் இடங்களை அழிக்க வேண்டும்.

4. தண்ணீர் தேங்குதல்/ தண்ணீர் முகாமைத்துவம் - மழை காலங்களில் கொட்டகைகளுக்குள் வரும் தண்ணீர் மற்றும் வெளியே தேங்கும் தண்ணீர் என்பன பல நோய் நுண்ணங்கிகளும் பீடைகளும் பெருகும் வாய்ப்பை வழங்கக் கூடியதால் அவற்றை சரியாக முகாமை செய்ய வேண்டும்.

5. காலநிலை - ஒப்பீட்டளவில் வெய்யில் காலத்தை விட மழை காலத்தில் தான் மடிசார்ந்த நோய்கள் வருவதால் அந்தப் பருவத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

6. உயிர்ப் பாதுகாப்பு - பண்ணைகளின் நுழைவுகளில் நோய் பரப்பக் கூடிய மனிதர்கள், வாகனங்கள், விலங்குகளை வரவிடாமல் தவிர்க்க வேண்டும். நுழையும் வாகனங்கள், வாகனச் சக்கரங்கள், உபகரணங்கள் தொற்று நீக்கப்பட வேண்டும். மனிதர்கள் மாற்று உடைகள், காலணிகளைப் பண்ணைக்குள் பாவிக்க வேண்டும்.

7. உணவு/ மணம் - கால்நடைகள் உண்ணும் உணவு மற்றும் தண்ணீரின் வாடை சில வேளை பாலிலும் வரும் என்பதால் அப்படியான உணவுகளை தவிர்க்க வேண்டும்.

8. வெளிக்களங்களில் பால் கறத்தல் - இலங்கையின் உலர்வலயப் பகுதிகளில் பெரும்பாலான கால்நடைகள் வெளிக் களங்களில் வளர்க்கப்படுவதால் பால் கறத்தலும் அங்கேதான் இடம்பெறுகிறது. இதனால் பால் கறத்தலின் சுகாதாரம் சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. முடிந்தவரை அந்த நிலைமைகளில் குறைந்தபட்ச சுகாதார நடைமுறைகளை யாவது கடைப்பிடிக்க வேண்டும்.

9. கலப்படங்கள் - இயற்கையான பாலின் உள்ளீடுகளை மாற்ற பலர் தண்ணீர், சீனி, யூரியா போன்றவற்றை கலக்கின்றனர். இதனாலும் பாலின் தரம் குறைகிறது. இது மனித சுகாதாரத்தை பாதிக்கவல்லது.



10. மேய்ச்சல் இடங்கள் மற்றும் வழங்கப்படும் உணவுகளின் தரம் - தரமற்ற புற்களைக் கொண்ட மேய்ச்சலிடங்களில் மேயும் பசுக்களின் பாலிலும் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் தரம் குறைந்த பழுதடைந்த உணவுகளை வழங்கும் போதும் மாடுகள் சுகயீனம் அடைவதோடு பாலுற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. முடிந்த வரை தரமான புல், செறிவுணவு கிடைக்க வகைசெய்ய வேண்டும்.

### பால்தொடர்பாக பயன்படும் இயந்திரங்கள் மற்றும் பாத்திரங்கள் தொடர்பான பால் சுகாதாரமும்

பாலைக் கறப்பது, சேமிப்பது, கொண்டு சேர்ப்பது என சகலதுக்கும் பயன்படுத்தப் படும் பாத்திரங்கள் காரணமாகவும் பாலின் தரம் பாதிக்கப்படுகிறது.

1. பல இடங்களில் மேற்படி பால் பாத்திரங்கள் அரைகுறையாகவே கழுவப் படுகின்றன. முறையாக உலர்த்தப்படுவதில்லை. இதனால் பாலின் மீதிகள் தேங்கி பல நுண்ணுயிர்களுக்கான வாழ்விடமாக மாறுகின்றன. மறுநாள் சுத்தமான பாலை ஊற்றும் போது அதுவும் பழுதடைகிறது. இந்தப் பாலை கொள்முதல் செய்யும் போது ஏனையவர்களின் பாலும் பாதிப்படைகிறது. பால் பாத்திரங்களை பால் எடுத்த பின் நன்கு சுத்தமான தண்ணீரில் கழுவி தொற்று நீக்கி காயவிட வேண்டும். மறுநாள் எடுக்கும்போதும் சுத்தமாக கழுவ வேண்டும்.

2. கறக்கப்படும் பால் நுண்ணங்கிகள் வளர முடியாத வெப்பநிலையில் (4 பாகை செல்சியஸ் வெப்பம்) குளிர் சாதனங்களில் வைத்து சேமிக்கப்பட வேண்டும். பலரால் மாலை கறக்கப்படும் பால் மறுநாள் கொடுக்கப்படும் போது பழுதடைந்து போகிறது. முடிந்தவரை அதற்குரிய குளிர்சாதன வசதியில் சேமிக்கவேண்டும். சேமிக்கும் பாலை தூசி துணிக்கைகள், அழுக்குகள், எலி, பூச்சிகள் பாதிக்காமல் பார்க்க வேண்டும். அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் பண்ணையாளர்களுக்கு குளிர் சாதன வசதிகளை மானிய அடிப் படையில் அதிகளவில் வழங்க வேண்டும்.

3. பால் பாத்திரங்களை ஏனைய பாத்திரங்களில் இருந்து தள்ளி வைப்பதோடு பால் கறக்கப் பயன்படும் பாத்திரங் களை வேறு தேவைக்கு பயன்படுத்தக் கூடாது.

4. முடிந்தவரை தரமான ஊடகங்களால் செய்யப்பட்ட பாத்திரங்களையே (stainless steel) பாவிக்க வேண்டும். நெளிந்த சிதைந்த பாத்திரங்களில் நுண்ணங்கிகள் ஒளிந்து மறையக்கூடியதால் அவற்றை அகற்ற வேண்டும். பிளாஸ்ரிக் பாத்திரங்கள் சிதைவடையக் கூடியதால் அந்த சிதைவுகளில் நுண்ணங்கிகள் காணப்படும்.

5. முதல் கறந்த மற்றும் பிறகு கறந்த பால் தொடர்பான அறிவுறுத்தலுடன் கூடிய லேபிள்களை பாத்திரங்களில் ஒட்டினால் முதல் கறந்த பாலை முதலிலேயே பயன்படுத்தலாம். நேரம் செல்லச் செல்ல பாலில் நுண்ணங்கிகள் பெருகுவதால் இந்த ஏற்பாடு பலன் தரும்.

6. பாலைப் பாதிக்கவல்ல இரசாயன பதார்த்தங்கள், தொற்றுநீக்கிகள் பாலுடன் தொடுகையுறாமல் பார்க்க வேண்டும்.

7. பாலை கொண்டு செல்லும் பாத்திரங்களும் பால் கறவை இயந்திரங்களும் சுகாதாரமாக இருப்பது அவசியம். முன்னர் சொன்ன நடைமுறைகள் இதற்கும் பொருந்தும்.

8. பைக்கற்றில் அடைக்கும் பால் மற்றும் ஏனைய பெறுமதிசேர் பால் பொருட்கள் எனில் முறையான சேமிப்பு மற்றும் பொதியிடல் முறைகள் கையாளப் பட வேண்டும். தரமான சேமிப்பு, பொருத்தமான வெளி உறைகள் பாவிக்கப்பட வேண்டும். அடிக்கடி தரக்கட்டுப்பாட்டு பரிசோதனை அவசியம்.

சுத்தமான பால் உற்பத்தியின் பெரும்பாலான விடயங்களை ஆராய்ந்துள்ளேன். பால் சுகாதாரம், பாலின் தரத்தையும் மனித சுகாதாரத்தையும் உறுதி செய்கின்றது. கறக்கப்பட்ட பின்னர், பாலில் ஏற்படும் பாதிப்பினால் உண்டாகும் வருமான இழப்பையும் தடுக்கிறது. எனவே முடிந்தவரை பாலை சுத்தமாக உற்பத்தி செய்வோம்.

# இராசிபலன்

05.07.2025
ஆனி 21, சனிக்கிழமை
தசமி முன்னிரவு 8.01 மணிவரை
சுவாதி முன்னிரவு 9.19 மணிவரை

சுபநேரம் 2.57-4.27 மணிவரை
இராகுகாலம் 8.57-10.27 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்-
உத்தரட்டாதி, ரேவதி

வளவன்




ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மாற்று மருத்துவத்தால் உடல் நலன் சீராகும், மனதிற்கினிய சம்பங்கள் இடம்பெறலாம்.




வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.




மனதிற்கினிய சம்பவங்கள் நடை பெறும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கூடும்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




வாகன சுகத்தால் வளம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.




விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், வழிபாடு குதூகலம் தரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், பணவரவு திருப்தி தரும்.




நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.




வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் கூடும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள், உற்சாகமான நாள்.




குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக உள்ளவர்களின் உதவியை நாடுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் அனுகூலம் தரும்.

**தனது திறமைகளை காலத்தில் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்தவனே அறிவாளி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற 100 மீற்றர் (FREESTYLE) நீச்சல் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் T.கணேஷ்வரன் இரண்டாவது தங்கப் பதக்கத்தை வென்றார். 20 வயதிற்கு உட்பட்டோருக்கிடையிலான இந்த போட்டி யானது கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இதில் குறித்த மாணவன் 1.39 நிமிடத்தில் இலக்கை நீந்தி கடந்து மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று இன்று இரண்டாவது தங்க பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். (8-104)

# மாநகர பிரதி முதல்வர் குழு யாழ். நகருக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திருமதி. மதிவதனி விவேகானந்தராசாவின் பணிப்பில் பிரதி முதல்வர் இம்மானுவல் தயாளன் தலைமையில் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர சுகாதார பிரிவு அதிகாரிகள் உள்ளடங்கலான குழுவினர் யாழ்ப்பாணம் நகர்ப்புற கடைத்தொகுதிக்கு விசேட கள விஜயம் ஒன்றை கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை மேற் கொண்டனர்.

நகர்ப்புற கடை நடத்துனர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், நகர்ப்புறத்திற்கு வந்து செல்லும் மாநகர குடியிருப்பாளர்கள், பொது மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் இதன் போது பிரதி முதல்வர் தலைமையிலான குழுவினர் ஆராய்ந்தனர்.

கடைகளுக்கான நடைபாதையில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், சுகாதார வசதிகள் குறிப்பாக குடிநீர் மற்றும் பொது மலசலகூடம் சார்ந்து காணப்படும் முக்கிய நீண்டகால குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்து உடனடியாக அவற்றை தீர்ப்பதற்கான பணிப்புரையை உரிய உத்தியோகத்தர்களுக்கு பிரதி முதல்வர் இ.தயாளன் விடுத்திருந்தார்.

அதன் அடிப்படையில் பல நடவடிக்கைகள் உடனடியாக இடம்பெற்றது.

மேற்படி விஜயத்தின் மூலம் நீண்டகாலமாக நகர் மத்தியில் காணப்பட்ட முக்கிய குடிநீர் மற்றும் சுகாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# பாரம்பரிய கலைத்திறன் வெளிப்பாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகினால் நிகழ்த்தப்படும் தெய்வீக சுகானுபவ தொடர் நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக கலைமன்றங்களுக்கிடையில் கரகாட்டம், காவடி ஆட்டம், உயிலாட்டம், கோலாட்டம், கும்மி, தமிழிசை, சண்முக கௌத்துவம், வாத்திய சங்கமம், வில்லுப்பாட்டு, உடுக்கு அடித்துப் பாடுதல், கூத்து, இசை நாடகம், பறை இசை, கிராமியப்பாடல் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

குறித்த போட்டிகளுக்கான விண்ணப்பங்களை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு எதிர்வரும் 2025.07.18 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் அலகிற்கு கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 021 205 4105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும். அல்லது விண்ணப்பப் படிவங்களை www.np.gov.lk / www.edumin.np.gov.lk எனும் இணையத்தளங்களின் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)



**தேசிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வடக்கு வலய பிரதிப் பதிவாளர் நாயகம் ப. பிரபாகர் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.**

# யாழில் 83 கிலோ கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில் கேரளா கஞ்சா கடத்தப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்த போது, சந்தேக நபர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

அதனை அடுத்து அப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 38 பொதிகளில் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 83 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இருந்து தப்பிசென்ற சந்தேகநபர்களை கைது செய்ய மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மேலதிக



விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)



பதவி உயர்வு பெற்று வடக்கு மாகாண சபையில் கடமையேற்கும் வலிகிழக்கு பிரதேச செயலர் ச.சிவகிரியின் சேவையைப் பாராட்டி வலி கிழக்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் மு.விக்னேஸ்வரனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 170 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 600 |
| தக்காளி | 180 | 200 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 |
| கோவா | 250 | 450 | 280 |
| கரட் | 400 | 400 | 380 |
| பூசணி | 120 | 140 | 120 |
| புடோல் | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 180 | 120 |
| பாகற்காய் | 550 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 120 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 |
| பயற்றங்காய் | 300 | 400 | 350 |
| லீக்ஸ் | 350 | 350 | 260 |
| பீற்றூட் | 200 | 300 | 220 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 400 |
| போஞ்சி | 600 | 550 | 480 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 60-120 | 60 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 200 | 80-150 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 400 |
| முள்ளங்கி | 200 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 |
| வல்லாரை | 80 | 75 | 80 |
| ஈரப்பலா | 150 | 200 | -- |

# மனவளக்கலைப்பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைரொய்டு பிரச்சினை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளைத் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் வா. வள்ளி வழங்குவார். தொடர்புகளுக்கு 076 8[illegible] 1395, 077 736 8745 (8)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கியின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ்.பிராந்தியமும் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் (மக்கள் வங்கி கிளை) இணைந்து நடத்தும் "இரத்ததான நிகழ்வு" நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை ஸ்ரான்லி வீதிக்கிளை மக்கள் வங்கியில் இடம்பெறவு[illegible] தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி நகரும் இலங்கை-ஐ.எம்.எப்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு பெற்ற திட்டத்தின் கீழ், இலங்கையின் பொருளாதாரம் முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய நிர்வாகக் குழுவின் துணை நிர்வாக இயக்குநரும், செயல் தலை வருமான கென்ஜி ஒகமுரா வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ள தாவது,

இலங்கையின் செயல்திறனை, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபை அண்மையில் மதிப் பாய்வு செய்ததை தொடர்ந்து இது வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் முக்கிய சீர்திருத்தங்கள் உறுதியான முடிவுகளைத் தரத் தொடங்கியுள்ளன.

சீர்திருத்தங்கள் பலனளிக்கின்றன, பொருளாதார வளர்ச்சி வலுவடைகிறது, பணவீக்கம் குறைவாகவே உள்ளது, இருப்புக்கள் குவிந்து வருகின்றன.

இந்த நிலையில் இலங்கையின் அதிகாரிகள், தமது நிதியத்துடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்று சர்வதேச நாணய நிதிய நிர்வாகக் குழுவின் துணை நிர்வாக இயக்குநரும், செயல் தலைவருமான கென்ஜி ஒகமுரா வலியுறுத்தியுள்ளார். (நி)

# 62 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இதுவரை பதிவு-பொலிஸ் தலைமையகம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 62 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் 34 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் 44 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலக கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் மாத்திரம் நாட்டில் மூன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதன்படி, கந்தானை பொதுச் சந்தைக்கு அருகில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அத்துடன், நீர்கொழும்பு - துன்கல் பிட்டிய பிரதேசத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேலும், ராகதை, படுவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட பாதாள உலக கும்பலின் தலைவரான "கணேமுல்ல சஞ்சீவ" வின் நெருங்கிய நண்பரான "அமி உப்புல்" என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)


University of Jaffna, SriLanka
Faculty of Graduate Studies

Admission for Postgraduate Research Programme
Master of Philosophy (MPhil) & Doctor of Philosophy (PhD) – 2025

The Faculty of Graduate Studies, University of Jaffna invites applications from eligible candidates for Master of Philosophy (MPhil) and Doctor of Philosophy (PhD).

Please visit our website (www.grad.jfn.ac.lk) for more details.

Contact the Faculty of Graduate Studies (T.P. No. : 021 222 3608) during office hours for further clarifications.

Registrar (சி-3335)



**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட ஆதனத்தை வெளிப்படுத்துவதற்கான பகிரங்க அறிவித்தல் (கட்டட அனுமதி கோரல்)**

இவ் ஆதனம் நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி என்னும் முகவரியில் கீழ்வரும் ஆதன அட்டவணையினால் விபரிக்கப்படும் ஆதனமாகும்.

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வடமராட்சிப்பகுதி, உடுப்பிட்டிக் கோவிற்பற்று, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கு உட்பட்ட நவிண்டில் குறிச்சியிறை **"இரும்பிராச்சி"** நிலப்பரப்பு 4 குளி 16.26. இது 22.07.2015 திகதியிட்டு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.T.ஸ்ரீஸ்கந்தசிங்கம் அவர்களினால் 410ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் துண்டுகள் 1, 2 எனக்காட்டப்பட்டுள்ளது. இதில் குறித்த படத்தில் முதலாம் இலக்க காணித்துண்டிற்கு நிலப்பரப்பு இரண்டு குளி எட்டுத்தசம் ஒன்று மூன்று (நிலப்பரப்பு 2 குளி 8.13). இந்த நிலப்பரப்புக் கொண்ட ஆதனத்திற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு சின்னப்பு கந்தசாமிக்குரிய ஆதனம் மேற்கு சின்னதம்பி கந்தசாமிக்குரிய ஆதனமும் ஒழுங்கையும் தெற்கு குறித்த படத்தில் துண்டு 2 எனக்காட்டப்பட்ட இராசன் கணேசமூர்த்திக்கும் பெண் ரதீபாவிற்குமுரிய ஆதனம் இதனடங்கலும்.

இவ் ஆதனத்தில் திருமதி.ஜெயம் பரமேஸ்வரி அவர்கள் வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு கட்டட அனுமதிக்காக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையில் விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் உரித்தை உறுதி செய்யப்பட்டு வீட்டுத்திட்ட கட்டட நிர்மாணத்திற்கு சபை அங்கீகாரம் வழங்குவதில் எவராயினும் ஒருவருக்கு ஆட்சேபனை இருப்பின் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருப்பின் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரேனும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமை கோரவோ இல்லை எனின் திருமதி.ஜெயம் பரமேஸ்வரி அவர்கள் வீட்டினை அமைப்பதற்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கட்டட அனுமதியினை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளும் என்பதனை அறியத்தருகின்றேன். மேலும் இவ் அனுமதி தொடர்பாக ஏற்படக்கூடிய ஆதனஉரிமை தொடர்பான எவராயினும் ஒருவருக்கு தங்களின் இழப்புக்களுக்கோ அல்லது அதன் எதிர்விளைவுகளுக்கோ வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,**
**கரவெட்டி.** (சி-3337)


# நாட்டில் வருடாந்தம் 33,000 புற்றுநோயாளர்கள்

## அதில் 800 பேர் சிறுவர்கள்

(கொழும்பு)

நாட்டில் வருடாந்தம் சுமார் 33,000 புதிய புற்றுநோய் நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், அவர்களில் 800 பேர் சிறுவர்கள் என அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மஹரகம தேசிய புற்று நோய் வைத்தியசாலையில் இந்திரா டிரேடர்ஸ் தனியார் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுவர் நோயாளர்களுக்கான ஐந்து மாடிக் கட்டடத்தின் அடிக் கல் நாட்டு விழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் இடம்பெற்றிருந்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (நி)

# முன்னாள் அமைச்சர் சந்திரசேன கைது



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக வாக்குமூலம் அளிக்க வந்தபோதே அவர் கைது செய்யப்பட்டார். (நி)

# சிலாபம்-புத்தளம் வீதியில் இ.போ.ச.பேருந்து விபத்து



(புத்தளம்)

சிலாபம் - புத்தளம் வீதியில் தெதுறு ஓயா பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பலர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பேருந்து விபத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது பேருந்தில் பயணித்த பலர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

## இரண்டு வாரங்களில் 900 முறை நிலநடுக்கம்

### கடும் பீதியில் ஜப்பான் மக்கள்



(டோக்கியோ)

பசுபிக் நெருப்பு வளைய பகுதியில் ஜப்பான் அமைந்துள்ளதால் அடிக்கடி அங்கு நிலநடுக்கம் ஏற்படுகிறது.

அதன்படி அங்குள்ள டோகாரா தீவில் கடந்த 2 வாரங்களில் 900இற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் பதிவாகி உள்ளன.

இதில் மிகப்பெரிய நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.5 புள்ளிகளாகப் பதிவானது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் எப்போது வேண்டுமானாலும் வெளியேற தயாராக இருக்குமாறு பொதுமக்களை அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது.

இதற்காக, டோகாரா கடற்கரைப் பகுதியில் படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன. இந்த நிலநடுக்கத்தால் அங்கு வசிக்கும் மக்கள் பீதியில் உறைந்து காணப்படுகின்றனர். (நி)

## ஒரு புறம் சுதந்திரதி...

## மறுபுறம் ட்ரம்பிற்கு எ...

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவின் 250ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் நேற்று வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஒரு சில இடங்களில் ட்ரம்பிற்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

இந்நிலையில் "Free America Weekend" என்ற தொனிப்பொருளில் நாடு முழுவதும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நடவடிக்கைகளைக் கண்டித்து பேரணிகள், பொதுக்கூட்டங்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் சமூக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசின் கொள்கைகள் மக்கள் சுதந்திரத்தையும் அடிப்படை உரிமைகளையும் பெரும் அச்...

## ஆப்கானில் தாலிபான் ஆட்சி

# அங்கீகரித்தது ரஷ்யா

ஆப்கானிஸ்தானில் தாலிபான் அரசாங்கத்தை முறையாக அங்கீகரித்த முதல் நாடாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ரஷ்யா மாறியுள்ளது.

அதன்படி, ஆப்கானிஸ்தானின் புதிதாக நியமிக்கப்பட்ட தூதர் குல் ஹசன் ஹாசனிடமிருந்து முறையான நற்சான்றிதழ்களைப் பெற்றதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அறிவித்தது.

ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ அங்கீகாரம் உற்பத்தித் திறன் கொண்ட இருதரப்பு ஒத்துழைப்பை வளர்க்கும் என்று அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.



அதேநேரம், ஆப்கானிஸ்தானின் வெளிவிவகார அமைச்சு, இதை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை என்று கூறியது.

அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தாலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றினர்.

அப்போதிருந்து, அவர்கள் சர்வதேச அங்கீகாரத்தை நாடுகிறார்கள்.

அதேநேரத்தில் இஸ்லாமிய சட்டத்தின் கடுமையான நிபந்தனைகளையும் அவர்கள் அமுல்படுத்துகிறார்கள்.

இதுவரை எந்த நாடும் தாலிபான் நிர்வாகத்தை முறையாக அங்கீகரிக்கவில்லை என்றாலும், அந்தக் குழு பல நாடுகளுடன் உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

குறிப்பாக சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகளுடன் சில இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும், பெரும்பாலும் பெண்கள் மீதான அதன் கட்டுப்பாடுகள் காரணமாக தாலிபான் அரசாங்கம் உலக அரங்கில் ஒப்பீட்டளவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

1996 முதல் 2001 வரை ஆட்சியில் இருந்ததை விட, தாலிபான்கள் ஆரம்பத்தில் மிகவும் மிதமான ஆட்சியை முன்னெடுப்பதாக உறுதியளித்த போதிலும், 2021 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய உடனேயே பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது கட்டுப்பாடுகளை அமுல்படுத்தத் தொடங்கினர்.

பெண்கள் பெரும்பாலான வேலைகள் மற்றும் பொது இடங்களில், பூங்காக்கள், குளியலறைகள் மற்றும் உடற்பயிற்சி நிலையங்களில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் பெண்கள் ஆறாம் வகுப்புக்கு மேல் கல்வி கற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானை நிலைநிறுத்த தாலிபான்களுடன் இணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தை ரஷ்ய அதிகாரிகள் அண்மையில் வலியுறுத்தி வருகின்றனர்.

மேலும் ஏப்ரல் மாதம் தாலிபான்கள் மீதான தடையை நீக்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ணக் கொண்டாட்டம்

# ...திரான போராட்டம்!



சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளதாகத் தெரிவித்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நியூ யோர்க், சான் பிரான்சி ஸ்கோ, டெக்சாஸ், புளோரிடா போன்ற நகரங்களில் மக்கள் அமைதியான முறையில் தமது எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர். குறித்த போராட்டமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பிரபல கால்பந்து வீரர் கார் விபத்தில் உயிரிழப்பு

### ரசிகர்கள் சோகம்!



(பிரேசில்)

லிவர்பூல் கால்பந்து கழகத்தின் நட்சத்திர வீரரும், போர்த்துக்கல் அணியின் தேசிய வீரருமான டியாகோ ஜோட்டா ஸ்பெயினில் நடந்த கார் விபத்தில் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

டியாகோ ஜோட்டாவும், அவரது சகோதரர் ஆண்ட்ரே சில்வாவும் லம்போர்கினி சொகுசு காரில் சென்றுள்ளனர். A52 நெடுஞ்சாலையில் முன்னால் சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முயன்றபோது திடீரென டயர் வெடித்து கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. தொடர்ந்து உடனடியாக கார் தீப்பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில் டியாகோ ஜோட்டாவும், ஆண்ட்ரே சில்வாவும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் சமோரா மாகாணத்தின் பொலிஸ் அதிகாரிகளும், தீயணைப்பு துறையினரும் மற்றும் மருத்துவ பணியாளர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். ஆனால் இருவரையும் பிணமாகத்தான் மீட்க முடிந்தது.

டியாகோ ஜோட்டா லிவர்பூல் கழக அணிக்காக 182 போட்டிகளில் 65 கோல்களை அடித்துள்ளார். கடந்த பருவ காலத்தில் லிவர்பூல் அணி பிரீமியர் லீக்கை வெல்ல பெரிதும் உதவியாக இருந்தார். மேலும் மெர்சிசைட் அணியுடன் FA கோப்பை மற்றும் லீக் கோப்பையையும் லிவர்பூல் கழகம் வென்றெடுக்க உதவியாக இருந்தார்.

இதுதவிர போர்த்துகலுக்காக 49 போட்டிகளில் விளையாடி, இரண்டு முறை UEFA நேஷன்ஸ் லீக்கை வென்றுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்த டியாகோ ஜோட்டாவின் சகோதரரான ஆண்ட்ரே சில்வாவும் கால்பந்து வீரர் தான். இவர் போர்த்துகீசிய அணியான எஃப்சி பெனாஃபீலுக்காக ஏராளமான போட்டிகளில் விளையாடியுள்ளார். டியாகோ ஜோட்டாவும், ஆண்ட்ரே சில்வாவும் உயிரிழந்தது கால்பந்து ரசிகர்களிடமும், போர்த்துக்கல் மக்களிடமும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## ஜுலை 15இல் இந்தியா வரும் அப்பாச்சி ஹெலிஹொப்டர்கள்

### அமெரிக்கா உறுதி



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இருந்து, 3 அப்பாச்சி ரக ஹெலிஹொப்டர்கள் இந்தியா வருகிறது. ஜுலை 15 ஆம் திகதி இந்தியா வந்தடையும் என அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்ஸெத் உறுதிப்படுத்தி உள்ளார்.

அப்பாச்சி என்பது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட, அதிரடி தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் திறன் கொண்ட ஹெலிஹொப்டர் ஆகும். இந்திய விமானப்படை மற்றும் இந்திய இராணுவத்திலும் அப்பாச்சி ஹெலிஹொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஹெலிஹொப்டர், அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டுள்ளது.

இதன் தேவை அதிகரித்துள்ளதால், பெப்ரவரி 2020 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் ரூ.5,691 கோடி மதிப்பில் (இந்திய மதிப்பில்) 6 அப்பாச்சி ரக விமானங்கள் வாங்க, இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது. ஆனால் நீண்டகாலமாக அவை வழங்கப்படாமல் நிலுவையில் இருந்தது. 6 ஹெலிஹொப்டர்களில், முதற்கட்டமாக, போயிங் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட மூன்று அப்பாச்சி ரக போர் ஹெலிஹொப்டர்கள் ஜுலை 15ஆம் திகதிக்குள் வழங்கப்படும்.

அடுத்த மூன்று நவம்பர் மாதத்திற்குள் வழங்கப்படும் என மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உடன் தொலைபேசியில் பேசுகையில் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்ஸெத் உறுதி அளித்தார். 2015 ஆம் ஆண்டு செப்டம்பரில் அமெரிக்காவுடனான ரூ.13,952 கோடி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய விமானப்படையில் 22 அப்பாச்சி ஹெலிஹொப்டர்களும், இராணுவத்தில் 6 அப்பாச்சி ஹெலிஹொப்டர்களும் பயன்பாட்டில் உள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி லடாக்கில் உள்ள கர்துங் லா அருகே ஒரு அப்பாச்சி ஹெலிஹொப்டர் சேதம் அடைந்தது. அப்பாச்சி ஹெலிஹொப்டர்கள் ஏவுகணைகள், துப்பாக்கிகள் மற்றும் ராக்கெட்டுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இந்த ஹெலிஹொப்டர்கள் பல்வேறு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இது துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## இமாச்சலப் பிரதேசத்தில் கனமழை

## 37 பேர் உயிரிழப்பு



(டில்லி)

இமாச்சலப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் 37இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், சீரற்ற வானிலை மலைப்பகுதி முழுவதும் பரவலான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், 400 கோடி இந்திய ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும், மீட்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் இமாச்சலப் பிரதேச மாநில பேரிடர் மேலாண்மை ஆணையகம் கூறியுள்ளது.

இதனிடையே, இந்திய வானிலை ஆய்வு நிலையம் (IMD) ஜுலை 7 ஆம் திகதி வரை மாநிலத்திற்கு மழை எச்சரிக்கையை விடுத்துள்ளதுடன், தொடர்ந்து கனமழை பெய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இந்திய விமானப் படையால் உணவுப் பொட்டலங்கள் விமானம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் தலைமை அதிகாரி இராஜினாமா



ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி சந்தன எல். அலுத்கம நிர்வாக அதிகாரி பதிவியை இராஜினாமா செய்வதாக ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இது ஆகஸ்ட் 1, 2025 முதல் அமுலுக்கு வருகிறது. 2018 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக திரு. அலுத்கம கடமைகளைப் பொறுப்பேற்றார்.

2024 பெப்ரவரி 1ஆம் திகதி ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து "ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப் லிமிடெட்" உடன் அவரது தலைமை தொடர்ந்தது.

தனது பதவிக்காலத்தில், பல்வேறு மாற்றங்கள் மூலம் நிறுவனத்தை வழிநடத்துவதிலும், குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைவதிலும் அவர் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

காப்பீட்டுத் துறையின் பல்வேறு துறைகளில் 33 ஆண்டுகளுக்கும் மேலான விரிவான அனுபவத்துடன், அலுத்கம 1992ஆம் ஆண்டு CTC ஈகிள் இன்சூரன்ஸ் கோ லிமிடெட்டில் தனது பயணத்தைத் தொடங்கினார்.

ஈகிள் இனசூரன்ஸ் PLC (சூரிச்) மற்றும் HNB அஷ்யூரன்ஸ் PLC போன்ற நிறுவனங்களில் மூத்த பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1997- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா: 31
1இல்செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Farm Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15764

பிறப்பு:1989-NRC
உயரம்:5'8"
தகைமை/தொழில்- O/L,Driver
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/15765

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:பூசம்
7 இல் செவ்
கி-பா: 58 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, Store Keeper
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15766

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி-பா: 48
7 இல் செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்-BSc,MSc,London
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15768

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா: 26
உயரம்:5'9"
தகைமை/தொழில்: BA, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15769

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in ICT
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15790

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-விசாகம்
12 இல் செவ்
கி-பா: 34
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc(IT), pvt
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/15791

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்- மிருகசீரிடம்
கி.பா: 24
உயரம்: 5"
தகைமை/தொழில்: BSc, Canada
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15792

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா -05
உயரம்: 5'5"
தகைமை/தொழில் -College, Teacher
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15794

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
9 இல் சூரிசெவ்
கி.பா-12 3/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Engineer, Doctor
தொ.இ: G/15796

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 408

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# எது மகிழ்ச்சி?

அவருக்கு என்ன சார் குடுத்து வைத்த மனிதன்! என்று ஒருவரை சுட்டிக்காட்டிச் சொன்னார் ஒரு நண்பர். "ஏன் அப்படிச்சொல்கிறீர்கள்?". என்று கேட்டேன்.

"சொந்தமாக ஒரு கார் வச்சிருக்கிறார். அழகான பங்களா கட்டியிருக்கிறார். அப்புறம் சந்தோஷத்துக்கு" என்ன குறைச்சல் என்றார்.

அவர் நினைப்பது மாதிரித்தான் நம்மிலே பலபேர் நினைக்கிறோம்.

ஆனால் பெரியவர்கள் எல்லாம் (ஓஷோ) அப்படி நினைக்கவில்லை.

நாம் எல்லாம் எப்படி என்றால்? ஒரு அழகான வீட்டிலே இருக்கிறோம்.

அது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்குது.

ஒரு அழகான காரிலே போகிறோம்.

அது ஏற்படுத்துகின்ற அந்த ஹம்மிங் ஒலியே நம்மளைப் பரவசப்படுத்துது. அதனாலே என்ன நினைக்கிறோம்?

நம்முடைய உண்மையான மகிழ்ச்சிக்கு இந்த வீடு தான் காரணம் கார்தான் காரணம்.

அப்படி நினைக்கிறோம். ஆனால் உண்மையிலே அப்படி இல்லை.

இந்த வீடும், காரும் நம்முடைய மகிழ்ச்சிக்கு ஒரு தூண்டுகோல்! அவ்வளவுதான்!

இந்தப் புறப்பொருள்கள் இல்லாமலேயே எல்லையற்ற ஆனந்தத்திலே நாம் மூழ்க முடியும்.

அதைப் புரிந்துகொள்ளாமல் வீடு - கார் - நிலம் - புகழ் -பதவி இப்படி உலகப்பொருள்களைச் சேகரிப்பதிலேயே நம்முடைய சக்தியை வீணாக்குகிறோம்! நமக்குள்ளே ஒரு விழிப்பு ஏற்படும் போது சேகரித்த பொருட்கள் நமக்குச் சுமையாவே இருக்கும் அதையெல்லாம் பாதுகாப்பதற்கே நமக்கு நேரம் இருக்கும்.

இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? இந்த உலகத்திலே எது எதுவெல்லாம் நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்குதோ.. அதையெல்லாம் நாம் நமக்கு உடமையாக ஆக்கிக் கொள்வதற்கு ஆசைப்படுகிறோம். அனுபவப்பட்டவர்கள் என்ன சொல்கிறார்கள்.

"எந்தப் பொருள் மேலேயும் பற்றுவைக்காதீர்கள். ஆனால் அவைகளையெல்லாம் வெறுமனே உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்! அதுகள் எல்லாமே உங்களுடைய சௌகரியத்துக்காக ஏற்பட்டவை. அவ்வளவுதான்!" என்கிறார்கள்.

இன்னொரு விடயத்தையும் இந்த சந்தர்ப்பத்திலே நாம் புரிஞ்சிக்க வேண்டும்.

இதுமாதிரி அறிவுரைகளை சும்மா கேட்டுகொண்டே இருப்பதினாலேயோ.. அல்லது இவைகளை ஆராய்வதாலோ எந்தப் பிரயோஜனமும் ஏற்படப் போவதில்லை!

இதுகளையெல்லாம்நாம்அனுபவத்துக்கு கொண்டு வர வேண்டும். அப்போதுதான் அது நமக்கு உபயோகப்படும்.

அனுபவம் அற்ற அறிவு எதற்கும் உபயோகப்படாது! இதெல்லாம் பெரியவர்கள் சொல்லும் கருத்து.

அவர்களுக்கு என்ன.. சுலபமாக எல்லாத்தையும் சொல்லிவிட்டுப் போய் விடுகிறார்கள்,

"மரணம் வாழ்வுக்கு எதிரி இல்லை!" அதுக்காக அதைக்கண்டு பயப்படாமல் நம்மாலே இருக்க முடியுதா?

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் மரணம் என்பது வாழ்வுக்கு எதிரி அல்ல உண்மையில் வாழ்விலேதான் மரணமும் அடங்கியிருக்கிறது. மரணம் இல்லாமல் வாழ்வு முழுமை பெறாது. மரணம்தான் வாழ்வுக்கு ஆதாரம். வாழ்வின் கவர்ச்சிக்கும் ஆனந்தத்துக்கும் ஆவலுக்கும் மரணம்தான் ஆதாரம். கொஞ்சம் ஆழமாகச் சிந்திச்சிப் பாருங்கள் புரியும்! என்கிறார்கள்.

அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது அப்புறம் எங்கே சிந்திப்பது அதையெல்லாம் விடுங்கள் சார். இப்ப நம் கதைக்கு வருவோம்.

ஒரு சாலையிலே திடீர் என்று ஒரு விபத்து. கார் ஒரு ஆளை மோதிவிட்டுப் போய் விட்டது அடி பட்டவன் கீழே விழுந்துட்டான் கும்பல் கூடிப் போனது. ஒரு அம்மா உதவி செய்வதற்கு ஓடிப்போய் அடிபட்டவனிடம் குனிந்தார்.

அதற்குள்ளே இன்னொரு ஆள் வேகமாக ஓடிவந்து அந்த அம்மாவை விலகி நிற்கச் சொல்லிவிட்டு அடிபட்ட ஆளை ஓரமாக உட்கார வைத்தான். எனக்கு முதல் உதவி செய்யத் தெரியும். Frist Aid படித்திருக்கேன். எல்லோரும் விலகி நில்லுங்கள் என்று சொல்லி விட்டு அந்த ஆளுக்கு முதலுதவிச் சிகிச்சைகளைச் செய்ய ஆரம்பித்தான். அந்த அம்மா அவனைப் பார்த்து. "இதோ பாருப்பா. உன்னுடைய முதலுதவி சிகிச்சை எல்லாம் முடிந்து வைத்தியரிடம் கொண்டு போகலாம் என்ற கட்டத்திலே என்னிடம் சொல்லு!" என் றார். "ஏன்?"என்று கேட்டான் அவன். "நான்தான், டாக்டர்!" - என்றார். அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில்

## இராணுவத்தின் பிடியில் உள்ள பொதுமயானம்

## விடுவிக்கப்பட வேண்டும் - ரவிகரன் எம்.பி வலியுறுத்து



ஒட்டுசுட்டான் நகர் பகுதியை அண்மித்துள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டு பொது மயானக்காணி உடனடியாக விடுவிக்கப்படுவதுடன், நீர்ப்பாசனத் திணைக் களத்திற் குரிய 25 ஏக்கர் காணிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென ரவிகரன் எம்.பி வலியுறுத்தினார்.

(நெளுக்குளம்)

**ஒட்டுசுட்டான் நகரை அண்டியபகுதியில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமயானக்காணி மற்றும் நீர்ப்பாசனத் திணைக் களத்திற்குரிய 25 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டுமென வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றநிலையிலேயே இந்தவிடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டானில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய 25 ஏக்கர் காணிகளையும், அதனோடு இணைந்த பொது மயானத்தையும் இராணுவத்தினர் அபகரித்துள்ளனர்.

இந்நிலையில் ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள மக்கள் இறந்தவர்களின் உடலங்களை பேராறு பொதுமயானத்திற்கு நீண்டதூரம் கொண்டுசெல்ல வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

எனவே இந்த நிலமை மாற்றப்படவேண்டும். உடனடியாக

இந்நிலையில் குறித்த காணிகளை விடுவிக்க அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படுமென ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரால் இதன் போது உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. (8-299)



நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படங்கள்:- ஜோசப் நயன்)

## தனியார் கல்வி நிலையங்களுக்கு ஞாயிறு விடுமுறை

(வவுனியா)

வவுனியா நகரில் ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் ஞாயிற்றுக் கிழமைகளில் அறநெறி வகுப்புக்களைக் கருத்தில் கொண்டு தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என பலரும் சுட்டிக் காட்டியுள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது, பதிலளித்த வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் தனியார் கல்வி நிலையங்களை நடத்துவதற்கு தடை விதித்து மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. அதனை தாம் மாநகர எல்லைக்குள் நடைமுறைப்படுத்துவதாக தெரிவித் திருந்தார்.

இதனையடுத்து, ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையத்தை நடத்த முடியாது என தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் தனியார் கல்வி நிலையங்களின் மாணவர்களுக்கான மலசல கூட வசதி, குடிநீர் வசதி என்பன இருக்க வேண்டும் எனவும், அதனை சுகாதார பரிசோதகர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-250)

## உப தபாலகக் கட்டடம் திறந்து வைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர கட்டடம் இன்றி இயங்கி வந்த நிலையில் உப தபாலகத்துக்கான நிரந்தர கட்டடம் சுமார் மூன்று மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் உப தபாலகத்தின் கட்டடத்தினை நேற்றைய தினம் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் திறந்து வைத்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீபன் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ் முரளிதரன் கண்டாவளை பிரதேச செயலாளர் மற்றும் துறை சார்ந்த திணைக்களங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டனர்

இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான. போசாக்கு பொதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஊன்று கோல் சக்கர நாற்காலி என்பனவும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-315)



வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற பொது மக்கள் தின நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தெரிவு செய்யப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்குதல், அரச கரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல், இரண்டாம் மொழிக் கற்கையை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் என்பன இடம்பெற்றன. (படங்கள்- வசந்தரூபன்)

## வவுனியாவில் புதிதாக மசாஜ் நிலையம் திறப்பு - பொதுமக்கள் எதிர்ப்பு

(வவுனியா)

வவுனியாவில் புதிதாக மசாஜ் நிலையம் (ஸ்பா) ஒன்று திறக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு பொது மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இது பல்வேறு கலாச்சார சீரழிவுகளுக்கு வழிவகுக்கும் எனப் பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே வவுனியா மாநகரசபை தலையிட்டு உடனடியாக இந்த நிலையத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த நிலையத்திற்கு வவுனியா மாநகரசபை எந்தவிதமான அனுமதியினையும் வழங்கவில்லை என மாநகர முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளதுடன் குறித்த நிலையத்தை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். (8-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 813





கனவிலே கண்டது நிஜம் போலத் தோன்றுகிறது! நல்ல தோழி எனக்குக் கிடைத்தாய்! நான்தான் பைத்தியக்காரி என்றால், நீ என்னைவிட ஒருபடி மேலே போய்விட்டாய்!" என்றாள் நந்தினி. இந்தச் சமயத்தில் சந்திரமதி உள்ளே வந்தாள். "அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்களாம்! வீரநாராயண ஏரியைத் தாண்டி வந்துவிட்டார்களாம்" என்று தெரிவித்தாள்.

*15 ஆம் அத்தியாயம்*

*இராஜோபசாரம்*

கடம்பூர் சம்புவரையர் மாளிகையின் முன் வாசல் அன்று மாலை, கண்டறியாத அற்புதக் காட்சிகளைக் கண்டது. கண்ணுக்கெட்டிய தூரம் ஜனங்கள் திரள் திரளாக நெருக்கியடித்துக் கொண்டு நின்றார்கள். ஆண்களும், பெண்களும், சிறுவர்களும், சிறுமிகளும், வயோதிகர்களும் அக்கூட்டத்தில் இருந்தார்கள்.

திடமாகக் காலூன்றி நிற்கவும் முடியாத கிழவர்களும் கிழவிகளும் கோலூன்றி நின்றார்கள். தாங்கள் பிறரால் அங்குமிங்கும் தள்ளப்படுவதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் ஆதித்த கரிகாலரின் வீரத் திருமுகத்தைப் பார்க்கும் ஆர்வத்தினால் தள்ளாடிக் கொண்டு நின்றார்கள். சிறுவர் சிறுமியர் தாங்கள் ஜனக்கூட்டத்தின் நடுவே நசுக்கப்படுவதைப் பொருட்படுத்தாமல் முண்டியடித்துக் கொண்டு முன்னால் வர முயன்று கொண்டிருந்தார்கள். யௌவனப் பெண்கள் தங்களுக்கு இயற்கையான கூச்சத்தை அடியோடு கைவிட்டு அன்னிய புருஷர்களின் கூட்டத்தினிடையே இடித்துப் பிடித்துக் கொண்டு முன்னால் வரப் பிரயத்தனம் செய்தார்கள். யௌவன புருஷர்களோ, அத்தகைய இளம் பெண்களைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல், அவர்களின் மீது கடைக்கண் பார்வையைக் கூடச் செலுத்தாமல், இளவரசரை நன்றாகப் பார்க்கக் கூடிய இடங்களைப் பிடிப்பதிலேயே கவனம் செலுத்தினார்கள். அவர்களில் பலர் கடம்பூர் மாளிகைக்கு எதிரிலும் பக்கங்களிலும் உள்ள மரங்களின் மீதெல்லாம் ஏறிக் கொண்டிருந்தார்கள். இன்னும் அநேகர் அந்த மாளிகையில் வெளி மதில் சுவரின் பேரிலும் ஏற முயன்று, அரண்மனைக் காவலர்களால் கீழே இழுத்துத் தள்ளப்பட்டார்கள். பச்சைக் குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு இளம் பெண்கள் எத்தனையோ பேர் அக்கூட்டத்தில் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டு நின்றார்கள். அழுத குழந்தைகளிடம் அவற்றின் தாய்மார்கள், "கண்ணே! அழாதே! வீரத் தமிழகத்தின் மகா வீராதி வீரர் 'வீரபாண்டியன் தலை கொண்ட' ஆதித்த கரிகால சோழர் வரப்போகிறார்! அவரைப் பார்க்கும் பேறு பெற்றால் நீயும் ஒரு நாள் அவரைப் போல் வீரனாவாய்!" என்று சொல்லிச்சமாதானப் படுத்த முயன்றார்கள். இம்மாதிரியே காதலர்கள் தங்கள் காதலிகளிடமும், தாய்மார்கள் தங்கள் புதல்வர்களிடமும், ஆதித்த கரிகாலரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அந்த விதமாக ஆதித்த கரிகாலரின் வீரப் புகழ் நாடெங்கும் அக்காலத்தில் பரவியிருந்தது. பன்னிரண்டாவது பிராயத்தில் போர்க்களம் புகுந்து கையில் கத்தி எடுத்துப் பகைவர் பலரை வெட்டி வீழ்த்தியவரும், சேவூர்ப் போர்க்களத்தில் பாண்டிய சைன்யத்தை முறியடித்து, வீரபாண்டியன் பாலைவனத்துக்கு ஓடிப் பாறைக் குகையில் ஒளிந்து கொள்ளும்படி செய்தவரும், பத்தொன்பதாவது பிராயத்தில் வீரபாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சின்னாபின்னம் செய்து அவன் ஒளிந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவன் தலையை வெட்டிக் கொண்டு வந்தவருமான இளவரசரைப் பார்ப்பதற்கு யார்தான் ஆர்வம் கொள்ளாமலிருக்க முடியும். (தொடரும்)

## மல்யுத்தம், ஜூடோ போட்டிகளில் 29 பதக்கங்களை வென்று சாதனை படைத்தது வித்தியானந்தாக் கல்லூரி

வட மாகாண ரீதியிலான மல்யுத்தம், ஜூடோ போட்டியில் 29 பதக்கங்களைப் பெற்று வித்தியானந்தா கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். வடக்கு மாகாண பாடசாலை களுக்கு இடையிலான மாகாண மட்ட மல் யுத்தம் மற்றும் ஜூடோ போட்டிகள் முல்லைத்தீவு மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த 28, 29 ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது.

வடமாகாண பாடசாலைகளில் மு/ வித்தியானந்த கல்லூரி (தேசிய பாடசாலை) மல்யுதத்த போட்டியில் ஆண்கள் பிரிவினர் முதலாம் இடத்தையும், பெண்கள் பிரிவினர் இரண்டாம் இடத்தையும் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர்.




மு/ வித்தியானந்தக் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவர்கள் 9தங்கப் பதக்கம், 9 வெள்ளிப் பதக்கம், 11 வெண்கலப் பதக்கம் என 29 பதங்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். (நி-299)

## சர்வதேச ரோல் உலகக் கிண்ணம் சாதித்த வீர வீராங்கனைகள் கௌரவிப்பு

2025 ஆண்டுக்கான உலகக் கிண்ண இளையவர் போட்டி மற்றும் பெரியோருக்கான ஆசியன் ரோல் போல் அணியில் மன்னார் மாவட்டம் சார்பாக இலங்கை அணிக்கு தெரிவாகி சர்வதேச ரீதியில் மூன்றாம் இடம் பெற்று கொண்ட வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு ரோல் போல் சங்க மன்னார் கிளைத் தலைவர் விமலேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் 27 வரை கென்யா நைரோபியில் இடம் பெற்ற ரோல் போல் உலகை கிண்ண போட்டிக்கு தெரிவான இலங்கை அணியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த மூன்று யுவதிகளும் 4 இளைஞர்களும் தெரிவாகி கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போட்டியில் இலங்கை அணி மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார் நகர சபை தலைவர், மன்ஃபுனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர், சமூக சேவையாளர் அகஸ்ரி உட்பட ரோல் போல் வீரர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (நி- 285)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகின்றனவோ அங்கே விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப் படுவார்கள். – சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்குக் கிழக்கை அரசு ஓரங்கட்டுகிறதா?

அதிகாரப் பகிர்வு என்பதும் ஓரங்கட்டுவ தென்பதும் ஒரு பொருள் தரும் சொற்பதங்கள் அன்று.

அதிகாரப் பகிர்வு என்பது ஆட்சி அதிகாரத் தில் கணிசமான உரிமையை வழங்குவது.

அதாவது அனைத்து விடயங்களையும் மத்திய அரசு தீர்மானிக்காமல், மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கி, அந் தந்த மாகாண சபைகள் தத்தம் கள நிலை களுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுத்து அவற்றை அமுலாக்குகின்ற நடைமுறை, அதி காரப் பகிர்வாகும்.

அதேநேரம் ஓரங்கட்டுவதென்பது கவனிக் காமல் அல்லது அதுபற்றி கருசனை கொள் ளாமல் விடுகின்ற செயற்பாட்டைக் குறிக்கும்.

இங்கு அதிகாரப் பகிர்வுக்குப் பதிலாக வடக் குக் கிழக்கு மாகாணங்கள் ஓரங்கட்டப்படு கின்றனவோ என்று எண்ணுமளவுக்கு அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் போக்கு அமைகிறது.

ஆம், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் அந்தந்த மாகாண ஆளுநர்களின் கீழ் இயங்குகின்றன.

அங்குள்ள பிரச்சினைகளுக்கு அவர்களே தீர்வு காண வேண்டும் என்ற நினைப்பு, அதி காரப் பகிர்வை முழுமையாக அமுலாக்கி அதற்குத் தேவையான நிதி மூலங்களை அறிமுகப்படுத்திய பின்னரே ஏற்புடையது.

ஆனால் அதிகாரப் பகிர்வோ அல்லது தேவையான நிதி விடுவிப்புகளோ இல்லாமல், அந்தந்த மாகாணங்கள் பார்த்துக் கொள்ளட் டும் என்ற மனநிலையில் செயற்படுவதானது, ஓரங்கட்டுகின்ற செயற்பாடேயன்றி, அதனை அதிகாரப் பகிர்வு அல்லது தலையிடாத் தன்மை என்று யாரும் நினைத்துவிடக் கூடாது.

உண்மை. ஜனாதிபதி அநுர குமார திசா நாயக்கவின் அரசாங்கம் முன்னெடுக்கின்ற பல விடயங்களை ஆதரித்து இவ்விடத்தில் பிரஸ்தாபித்துள்ளோம்.

ஆனால் வடக்குக் கிழக்கு மாகாணங் களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய் வதிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருக்கக்கூடிய இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகளை வழங்குவதிலும் அதற் கான முதலீட்டுத் திட்டங்களை உருவாக்கு வதிலும் அரசாங்கத்தின் ஈடுபாடு அறவே இல்லை எனலாம்.

இதற்கும் மேலாக, வடக்குக் கிழக்கு மாகா ணங்களின் அரச நிர்வாகத்தை அடியோடு கவனிக்காமல் விடுகின்ற மனநிலையில் அநுர அரசாங்கம் செயற்படுவதால், குறித்த இரண்டு மாகாணங்களிலும் அரச வேலைத் திட்டம் ஏனோதானோ என்று நகர்கிறது.

இதற்கு வட மாகாணத்திலுள்ள காப்பற் வீதிகள் கண்பாட்டில் வெட்டப்படுவது நல்ல உதாரணமாகும்.

## மகாவலித் திட்டத்தின் கீழ்

# 350 ஏக்கர் தமிழ் மக்கள் காணி வவுனியாவில் பறிபோகும் அபாயம்

(வவுனியா)

வவுனியா வடக்கு வெடிவைத்தகல்லுப் பகு தியில் மகாவலித் திட்டத் தின் கீழ் 350 ஏக்கர் நிலம் தமிழ் மக்களிடமிருந்து பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

மகாவலித் திட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் இனப் பரம்பலை சீர் குலைக்கும் செயற்பாடு கள் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முன்னெ டுக்கப்பட்டு வந்திருந் தது.

வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரி வில் கொக்கச்சான் குளம் அபகரிக்கப்பட்டு கலாபோகஸ்வேவ என்னும் பெயரில் புதிய குடியேற்றம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் உருவாக்கப்பட்டிருந் தது.

அதன் தொடர்ச்சி யாக தற்போது வெடி வைத்தகல்லு கிராம அலுவலர் பிரிவிலுள்ள மற்றொரு கிராமமான திரிவைச்சகுளம் பகுதி யில் 350 ஏக்கர் நிலம் மகாவலி வலயம் என்ற போர்வையில் உள்வாங் கப்பட்டுத் துப்பரவு செய் யப்பட்டுள்ளது.

குறித்த நிலத்தை தென் பகுதி நிறுவனம் ஒன்றுக் கும் பெரும்பான்மை சிங் கள மக்களுக்கும் வழங் குவதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்ற னர்.

தமிழ் பேசும் பாராளு மன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கவ னம் செலுத்தி தமிழ் மக் களின் நிலங்கள் மகா வலித் திட்டம் என்ற போர்வையில் கபளீகரம் செய்யப்பட்டு குடியேற்ற ங்கள் இடம்பெறுவதைத் தடுக்க முன்வர வேண் டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ம-250)

## அரசியல்வாதிகளைப் பாதுகாக்க அரச அதிகாரிகளை

# குற்றவாளியாக்க அநுர அரசு முயற்சி

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல்வாதிகளைப் பாதுகாக்க அரச அதி காரிகளைக் குற்றவாளி யாக்க அநுர அரசு முய ற்சி செய்கின்றது எனப் பாராளுமன்ற உறுப்பி னர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியா லயத்தில் நேற்று வெள் ளிக்கிழமை (04) நடை பெற்ற தொகுதி அமைப் பாளர்களுடனான சந் திப்பின் பின்னர் ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினை களை மூடி மறைத்து சர்வாதிகாரமான முறை யில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கும் நிலை யில் அரசாங்கம் உள் ளது. அனைத்து கட்ட மைப்புக்களிலும் தற் போது அடக்குமுறை கள் தீவிரமடைந்துள் ளன.

முதலில் ராஜபக்ஷர் கள் திருடர்கள் என்றார் கள் பின்னர் 225 பாரா ளுமன்ற உறுப்பினர்க ளும் திருடர்கள் என்றார் கள். தற்போது அரச அதிகாரிகள் திருடர்கள் என்று குறிப்பிடுகிறார் கள். அரச நிர்வாகக் கட் டமைப்பைப் பலப்படுத் துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரச நிர்வா கத்தைப் பலவீனப்படுத் தும் செயற்பாடுகள் மாத் திரமே முன்னெடுக்கப்படு கின்றன.

சுங்கத்தில் பரிசோத னையின்றி கொள்கலன் கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் உண்மையை அரசாங்கம் இதுவரை யில் வெளிப்படுத்த வில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து தற்போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் அரச அதிகாரிகளை குற்றவாளிகளாக்கும் வகையில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கொள்கலன் விவகா ரத்தில் அரசாங்கத் துக்கு நெருக்கமான நபரைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அரச அதிகாரிகளை குற்ற வாளிகளாக்கும் செயற் பாடுகள் தற்போது அர சாங்கத்தால் மேற்கொள் ளப்படுவதை அவதா னிக்க முடிகிறது.

நாட்டில் நாளாந்தம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இயல்பாகி விட்டது. மனித உரி மைகள் ஆணைக்குழு வின் உயர்ஸ்தானிகரை அழைத்து வந்து பழைய புதைகுழிகளை தோண் டுவதை விடுத்து, மக்க ளின் பொருளாதாரம் மற் றும் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். தேசிய பாது காப்பு பற்றி பேசுபவர் களை இனவாதிகளாக சித்தரிக்கும் போக்கு காணப்படுகிறது என் றார். (ம)

## காத்தான் குடியில்——

# மோ.சைக்கிள் விபத்து 17 வயது இளைஞன் பலி

(மட்டக்களப்பு)

மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதி யதால் இளைஞன் பரி தாபகரமாக உயிரிழந் துள்ளார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை காத்தான் குடி - கடற்கரை வீதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 17 வயது டைய முஹம்மத் என்ற இளைஞன் பலியாகியுள் ளார்.

வேகமாக செலுத்தி வந்த மோட்டார் சைக் கிள் கட்டுப்பாட்டை இழந்து விலகி மின்கம்பத்தில் மோதியுள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் காத்தான் குடி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்ட போதிலும் சிகி ச்சை பலனின்றி உயிரி ழந்தார்.

அவரது சடலம் காத் தான்குடி ஆதார வைத் தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலி ஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண் டு வருகின்றனர். (ம)

## பாதுகாப்புத் தொடர்பில் எதுவும் செய்யமுடியாமல் அரசு தவிக்கின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் எமக்குக் கற் பிப்பதற்குக் கதிரையும் மேசையும் எடுத்து வரச் சொன்ன அரசாங்கம் எதுவும் செய்ய முடியா மல் தவிக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிக ழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் மக் கள் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள் ளது.

நாட்டில் தொடர் கொலைகள் நடைபெறு கின்றன. அதற்கான காரணத்தைக் கூற முடி யாமல் அரசாங்கம் தவிக் கிறது.

மேலும் அரசு மிகவும் மந்தமான கொள்கை யையே கடைப்பிடிக்கி றது. ஆகவே இனிமேலா வது நாட்டில் நீதி நியா யத்தை நிலை நாட்டுமா றும் கேட்டுக் கொள்கின் றேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 06

சொக்கன்

பாலஸ்தீன விடுதலைப் போராளிகள் யாருடைய உயிருக்கும் உத்தரவாதம் இல்லை என்கிற பதற்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

மொசாட்டுக்கு அது தானே வேண்டும்? பாலஸ்தீனப் போராளிகள் மூச்சு விடக்கூட அவகாசம் தராமல் அடுத்தடுத்த கொலைகளை அரங்கேற்றினார்கள்.

மஹ்மூத் கொலை செய்யப்பட்டுச் சில வாரங்கள் கழித்து சைப்ரஸில் ஹுசைன் அல் பஷுர் என்ற பாலஸ்தீன விடுதலைப் போராட்டத் தலைவர் கொல்லப்பட்டார். அவருடைய படுக்கைக்குக் கீழே குண்டு வைத்துச் சிதறடித்திருந்தது மொசாட்.

அடுத்து மறுபடியும் பாரிஸ், இந்தமுறை பாசில் அல்குபைஸி என்ற பேராசிரியர் வைல் ஸ்வாட்டரைக் கொன்றதுபோலவே இவரையும் நடுத் தெருவில் சுட்டு வீழ்த்தினார்கள்.

மொசாட் வரிசையாகக் கொலை செய்வதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. இதன் மூலம் இஸ்ரேலின் விரோதிகள் மத்தியில் பயம் பரவுகிறதா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பினார்கள்.

இதனால் மொசாட் யாருக்கெல்லாம் குறி வைத்திருக்கிறதோ அவர்களுடைய வீடுகளுக்கு மலர் வளையங்கள் அனுப்பப்பட்டன. இன்னும் கொஞ்ச நாட்களில் உங்கள் வீட்டுத் தலைவரைக் கொல்லப் போகிறோம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

போதாதா? எப்போது கொல்வார்கள் எப்படிக் கொல்வார்கள் என்று புரியாமல் அந்தத் தலைவர்கள் தவித்துக் கொண்டிருக்கும் போதே மொசாட் ஏஜெண்ட்கள் கச்சிதமாகக் கதையை முடித்து விடுவார்கள்.

இந்தக் கொலைச் செய்திகளை இஸ்ரேல் மூடி மறைக்கவில்லை. நாங்கள்தான் செய்தோம் என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஒவ்வொரு கொலையைப் பற்றியும் விரிவான செய்திகள் கட்டுரைகள் லோக்கல் பத்திரிகைகளில் அதுவும் அரபிமொழியில் வெளியாகும்படி பார்த்துக் கொண்டார்கள்.

ஒரு கட்டத்தில் ம்யூனிக் படுகொலைக்குதான் இஸ்ரேல் பழி வாங்குகிறது என்கிற விபரம் பாலஸ்தீன விடுதலைப் போராளிகளுக்குப் புரிந்துவிட்டது.

இது அநியாயம் நீங்கள் கொலை செய்த நபர்களுக்கும் ம்யூனிக் தாக்குதலுக்கும் துளியும் சம்பந்தம் கிடையாது என்று அலற ஆரம்பித்தார்கள்.

மொசாட் அதையெல்லாம் கண்டுகொள்ள வில்லை. அவர்கள் தங்களுடைய அடுத்த பெரிய தாக்குதலைத் திட்டமிட ஆரம்பித்திருந்தார்கள்.

பாசில் அல்குபைஸி கொல்லப்பட்டு மூன்று நாட்கள் கழித்து சில மொசாட் ஏஜென்ட்கள் லெபனான் நாட்டின் தலைநகரமான பெய்ரூட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஜாலியாக ஊர் சுற்றும் இளைஞர்களைப்போல வேடம் போட்டுக் கொண்டார்கள் ஆடைக்குள் துப்பாக்கிகளை மறைத்து வைத்தார்கள்.

லெபனான் தேசத்தில் பாலஸ்தீன விடுதலைப்போராட்ட இயக்கங்களுக்கு ஆதரவு அதிகம். அவர்களுடைய கோட்டையில் புகுந்து மொசாட் என்ன செய்ய முடியும்?



மொசாட் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்தமுறை அவர்கள் ஒரே நேரத்தில் மூன்று தலைகளுக்குக் குறி வைத்திருந்தார்கள். எந்தத் தடைகள் வந்தாலும் சரி அந்த மூன்று பேரையும் கொல்லாமல் விடமாட்டோம்என்றுஉறுதிஎடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

**திமிங்கிலம் எங்கே?**

துளி வெளிச்சம் இல்லாத இருட்டு ராத்திரி மொசாட் ஏஜென்ட்கள் கள்ளத்தோணியில் இரகசியமாக வந்துசேர்ந்தார்கள்.

அங்கே ஏற்கெனவே சிலர் காத்திருந்தார்கள் அடையாளச் சங்கேதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கார் ரெடியா இருக்கு வாங்க போகலாம்.

ஆளில்லாத சாலைகளில் வண்டி அதிவேகமாக ஓடியது. கடைசியாக ஒரு சிறிய பாதையின் நடுவே போய் நின்றது.

எதிரெதிரே இரண்டு பெரிய கட்டடங்கள் அங்கே தான் மூன்று ப்ளாக் செம்டம்பர் புள்ளிகளுக்கு வட்டம் போட்டிருந்தது மொசாட்.

இந்தத்தாக்குதல்குழுவின் தலைவர் பெயர் எஹுத் பராக். யார் என்ன செய்யவேண்டும். அதை எப்படிச் செய்யவேண்டும் என்பதையெல்லாம் விநாடி சுத்தமாகத் திட்டமிட்டு எல்லோருக்கும் பயிற்சி கொடுத்திருந்தார் அவர்.

ஆனால் இப்போது எஹுத் பராக் மேக்கப் லிப்ஸ்டிக் சகிதம் ஒரு பெண்ணாக உருமாறியிருந்தார். அவருடைய கண்கள் சுற்றுப்புறத்தைக்கவனமாக நோட்டமிட்டன.

அவரைப்போலவே பெண் வேடம் போட்ட மொசாட் ஏஜென்ட்கள் காரிலிருந்து இறங்கி நின்றுகொண்டார்கள். யாரும் உள்ளே வராமல் நாங்க பார்த்துக்கிறோம். நீங்க காரியத்தைக் கச்சிதமா முடிச்சுட்டு வாங்க.

மற்ற மொசாட் ஏஜென்ட்கள் சத்தம் போடாமல் முன்னேறினார்கள். ராத்திரி நேரம் என்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் அவ்வளவாக இல்லை. அது அவர்களுக்கு ரொம்ப வசதியாகிவிட்டது. திட்டப்படி தங்களுடைய முதல் இலக்கை நோக்கி வேகமாக நடந்தார்கள்.

ஆனால் அவர்கள் யோசிக்க மறந்த விடயம் வெளியே நடுராத்திரி இந்த நேரத்தில் ரோட்டில் ஒரு கார் நிற்கிறது. அதில் சில பெண்கள் தனியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் பார்க்கிறவர்களுக்குச் சந்தேகம் வராதா?

சில நிமிடங்கள் கழித்து ஓர் இளைஞன் அந்தப் பெண்களை நெருங்கினான். யார் நீங்க? என்று துப்பாக்கியைத் தூக்கினான்.

எஹுத் பராகிற்கு யோசிக்கநேரமில்லஇவனிடம்மாட்டிக்கொண்டால் ஆபத்து. வேறு யாரும் வருவதற்கு முன்னால் இவனைத் தாக்கி வீழ்த்திவிட வேண்டும்!

அடுத்த விநாடி அந்தப் பெண்களின்கைகளில்துப்பாக்கிகள்முளைத்தன. அந்த இளைஞனை நோக்கிச் சுட ஆரம்பித்தார்கள்.

அவ்வளவுதான் சத்தம் கேட்டுப் பலர் ஓடி வந்தார்கள். என்ன நடக்கிறது என்றே புரியாமல் அவர்கள் விழிக்க மொசாட் பெண்கள் தொடர்ந்து சுட வேண்டியிருந்தது. சில நிமிடங்களில் வந்தவர்கள் சுதாகரித்துக் கொண்டு திருப்பித் தாக்க ஆரம்பித்தார்கள். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

வலயக்கல்வி அலுவலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

குறித்த பாடசாலையால் நேற்று திருகோணமலை மாவட்டத்திற்கு கல்விச் சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்காக மாணவர்களிடம் இருந்து பணம் அறவிடப்பட்டுள்ளது. குறித்த மாணவனும் சுற்றுலாவிற்கான பணத்தினை வழங்கியுள்ளார்.

இருப்பினும் காலை சுற்றுலாவிற்குச் செல்வதற்கு மாணவன் தயாரான நிலையில் மாணவனை அழைத்துச் செல்ல முடியாது என அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கவலையடைந்த மாணவன் தனது பெற்றோருடன் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகம் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து வலயக்கல்வி அதிகாரிகள் பாடசாலை நிர்வாகத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி மாணவனைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கியிருந்தனர். இதனையடுத்து மாணவன் தனது போராட்டத்தை கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

## ஒன்றரை வயது...

மேற்படி குழந்தைக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை (03) பிற்பகல் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து பெற்றோர் பனடோல் சிரப் வழங்கியுள்ளனர்.

மீண்டும் நேற்று வெள்ளிக்கிழமை (04) காலை குழந்தை வாந்தி எடுத்ததைத் தொடர்ந்து மயக்கமடைந்த நிலையில் அச்சுவேலி வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றபோது குழந்தை ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனையில் இறப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-60)

## ஹயஸ் மோதி...

நேற்றுக் காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த இரட்ணம் ஜெகதீஸ்வரன் செல்வந்தன் (வயது-69) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம் வவுனியா யாழ் வீதியில் புதிய பேருந்து நிலையம் முன்பாகச் சென்று கொண்டிருந்தபோது வீதியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்தவருடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் படுகாயமடைந்தவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

விபத்துத் தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-250)

## நவாலியில்...

நாச்சிமார் கோவிலில் இருந்த ஐம்பொன் எழுந்தருளி விக்கிரகம் ஒன்று நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் இவ்வாறு விக்கிரகத்தைக் களவாடிச் சென்றுள்ளனர். அதன் பெறுமதி சுமார் 10 இலட்சம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-104)

## தேரின் கலசம்...

சங்கரப்பிள்ளை சசிகலா என்ற பெண்ணே இதன்போது உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு குருந்தடிப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றபோது தேர் வீதி உலா வரும் போது தேரின் முடிக் கலசம், கட்டப்பட்டிருந்த மின் இணைப்பு வயரில் சிக்கி கழன்று வீழ்ந்ததில் குறித்த பெண் உயிரிழந்ததுடன் மற்றும் ஒரு பெண் படுகாயமடைந்துள்ளார்.

இந்த உயிரிழப்புச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் சென்று பார்வையிட்டுள்ளார். (ம-299)

## மோட்டார் சைக்...

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இது குறித்து மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-104)

## யாழ்ப்...

மதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு பிளாஸ் மோடியம் பல்சிபரம் என்ற மலேரியாக் காய்ச்சல் இனங்காணப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த குறித்த இளைஞன் 6 மாதங்களாக நைஜீரியா கப்பல் ஒன்றில் வேலை செய்து விட்டு கடந்த 28.06.2025 அன்று நைஜீரியா விலிருந்து விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணியின் ஒன்பதாம் நாள் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது மேலும் இரு எலும்புக் கூட்டுத் தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது 42 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக்கூட்டுத் தொகுதியில் இதுவரையில் 37 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அகழ்வுப் பணி இரண்டு பகுதிகளாக நடைபெற்றுவரும் நிலையில் புதிதாக அகழப்பட்ட பகுதியில் சிறுமி யொருவரின் ஆடையும் நேற்று மீட்கப்பட்டுள்ளது. (ம-33)


மஹஜன சம்பத — திகதி 2025.07.04 — சீட்டிழுப்பு இலக்கம் 5880 — W 5 8 6 4 2 3 — அத சம்பத W 6 4 2 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0455 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.07.04 — சீட்டிழுப்பு இலக்கம் - 1910 — R 12 19 57 59 R — Double Chance 18643

மெகா பவர் — திகதி 04/07/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2228 — F 10 25 65 69 75

ஜய — திகதி 2025.07.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0148 — S 2 2 2 1

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4122 — சீட்டிழுப்பு திகதி 04.07.2025 — J 34 37 44 78 — J — தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.07.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1189 — கும்பம் 21 27 38 53 கும்பம் — 32676 — 35

உத்தியோகபூர்வ முடிவுகள் — 04.07.2025 — வெற்றி வாரம் 588 — T 8 7 6 1 0 9 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,586,324.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2854 — சீட்டிழுப்பு திகதி 2025.07.04 — தினம் வெள்ளிக்கிழமை — 03 27 30 67 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,908,202.40 — DLB

சனிதா — திகதி 04.07.2025 — வெற்றி வாரம் 5015 — 03 32 45 77 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,493,019.60 — ரூ. 50,000/- — DLB

சசிரி — வெற்றி வாரம் 718 — சீட்டிழுப்பு திகதி 04.07.2025 — வெள்ளிக்கிழமை — 27 34 39 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4566 — சீட்டிழுப்பு திகதி 04.07.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 03 06 15 56 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,285,781.20 — DLB

ஜயோதா — 2030 — 04.07.2025 — வெள்ளிக்கிழமை — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — K 17 11 36 47 73 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.580,887,357.60 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2680 — சீட்டிழுப்பு திகதி 2025.07.04 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,922,443.20 — 56 60 74 75 U — ரூ.100,000/- — DLB


நயினையில் அமுத சுரபி
யாழில் அதிர்ஷ்ட சுரபி தொடரும்

நாக அதிர்ஷ்ட அலை மூலம் 2025.07.03 திகதி இடம்பெற்ற சீட்டிழுப்பில் ஜய (NLB) டிக்கட்டில் முதற்பரிசாக 500,000 பரிசு ச.கனகலிங்கம் முகவரூடாகவும் மற்றும் இணை முகவரான விஸ்ரஜினா மூலம் 50,000 பரிசும் வெல்லப்பட்டுள்ளது. மற்றும் ஜயசம்பத மூலம் 50,000 க.திலகவதி மூலம் வெல்லப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 2025.07.09 புதிய விசேட லொத்தர் "சுப தவசக்" லொத்தர்களை விரைந்து சென்று எமது லொத்தர் கூடுகளில் பெற்றுக் கொள்ளுங்கள். (4724)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீள நினைந்து வணங்குகிறோம்



குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நிர்வாகியாக 2013 முதல் 2024 வரை சிறந்த பணியாற்றிய

## சுதுமலை. உயர்திரு
## சோமசுந்தரம் ஸ்ரீதரன்

அவர்கள் கனடாவில் மாரடைப்பால் 01.07.2025 அன்று காலமானார். சிறந்த சேவையாற்றிய பெருமகனாரின் ஆத்மா சிவன் திருவடியில் ஆறுதல் பெறப் பிரார்த்திக்கின்றோம். (4702)

சிவபூமி ஞான ஆச்சிரமம் குப்பிழான். | நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை

## பெண் ஊழியர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் புத்தக, போட்டோகொப்பி கடைக்கு போட்டோ கொப்பி வேலையில் அனுபவமுள்ள பெண் ஊழியர்கள் தேவை!!!
யாழ் நகருக்கருகில் உள்ளோர் விரும்பத்தக்கது.
சம்பளம் - 30,000+ வரை

தொடர்புகளுக்கு :
**077 248 7801** (1287)

## சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (1279)

**075 728 6051**

## கனடா - வரி இல்லாமல்
### விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை (C-3336)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.

(குறிப்பு - இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்)

"நாங்கள் உங்களோடு"
**ஆர்க் .என். கம்பனி**



150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020 (4719)

Hotline : 071 535 7799/ 071 535 7803

# வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டப் பகுதியில் 2 பரப்பு பெறுமதியான நிலத்துடன் முழுவதும் மாபிள் பதிக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட 6 அறை வசதிகளுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும்: (1296)

**076 088 7957**
**076 009 8661**

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு Graphic designer, Type setting செய்வதற்கு வேலையாள் தேவை. யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (1292)
தொடர்புகளுக்கு :
**076 192 3444**
**077 482 1912**

## பணியாளர் தேவை

புடவை வியாபார நிலையம் ஒன்றிற்கு சாறி, சல்வார் வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண்கள் தேவை.
மாதச்சம்பளம் 75000/=
EPF, ETF என்பன வழங்கப்படும். (4722)

**077 889 9417**

# English Classes

உங்கள் வீடுகளில் தனி மற்றும் குழுவாகவும் அல்லது
Zoom மூலமும் Gr 1 to O/L and For English beginners
- Grammar
- Spoken & School Syllabus

(4711)
**T.P : 077 33 14 608**

## பணியாளர் தேவை


சாவகச்சேரியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு றொட்டி வேலை, கொத்து றொட்டி போடுதல், சமையல் உதவியாளர், பிறைட்றைஸ் தயாரிப்பவர், உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்) போன்ற வேலைகளில் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் தேவை. (1291)

தொடர்பு : **077 649 1027**

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 250/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 389/= |
| 1Kg றவை | - 290/= |
| 1Kg சர்க்கரை | - 265/= |
| 1Kg ஈக்குத்தீட்டல் பச்சை | - 215/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 240/= |
| 10Kg விஜிதா | - 2800/= |
| 1Kg மல்லி (M) | - 355/= |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 762/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 890/= |
| 1Kg கடலை | - 385/= |
| 1Kg சோயா | - 350/= |
| 400g விம் கட்டி | - 250/= ~~265/=~~ |

Max 01
400g Anchor 1060/= ~~1100/=~~



1Kg சவர்க்காரத் தூள் 280/= ~~326/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1295)
Happy Supermarket 0777 8080 30

## தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள்
க.பொ.த(உயர்தரம்) சித்தியடையாதோர்,
பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.



விவசாய உதவியாளர் பயிற்சி நெறிகள் (Field Assistant Agriculture)

1. தேசிய தொழில் தகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி )
   தகைமை – க.பொ.த சாதாரண தரம்
2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (6 மாத காலப்பயிற்சி நெறி)
   தகைமை –NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமான விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருத்தல்

வயதெல்லை : 16-24
பயிற்சிக்கட்டணம் இலவசம்
விண்ணப்ப முடிவுத் திகதி: 19.07.2025

மேலதிக விபரங்கள்
அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம், சுன்னாகம்.
தொலைபேசி :- 021 224 1420
மின்னஞ்சல்- jcinstituteofagriculture@gmail.com (4716)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிற்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org